1979 ஏப்ரல் 17]

புல்லூர் அணைத் திட்டம்.

*வினா எண் 696—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ரம்பள்ளி தொகுதி வாணியம்பாடி தாலூகாவில் புல்லூர் அணைக் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அப் பணியினை முடிக்க அரசு எடுத்துக் கொண்ட முயற்சி என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) புல்லூர் அருகே கட்ட திட்டமிடப்பட்ட நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சுமார் 120 ஏக்கர் ஆந்திர மாநிலத்தின் எல்லையில் உள்ளது. ஆந்திர மாநிலத்தின் எல்லையில் உள்ள இப்பகுதியில் இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான புலனாய்வு நடத்த ஆந்திர மாநிலம் அனுமதி அளிக்கவில்லை. இதனால், பாலாற்றின் குறுக்கே புல்லூர் அருகே அணை கட்டும் திட்டம் கைவிடப்பட்டது.

போச்சம்பள்ளி பகுதியில் ''சூரியகாந்தி எண்ணெய் ஆலை''

*வினா எண் 697 — டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியிலுள்ள ''சூரியகாந்தி'' எண்ணெய் ஆலை தற்போது இயங்கி வருகிறதா?

(ஆ) அந்த ஆலை எவ்வளவு ரூபாய் செலவில் உருவாக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தருமபுரி மாவட்டம்—போச்சம்பள்ளியிலுள்ள "சூரிய காந்தி எண்ணெய் ஆலை" செப்டம்பர் 1978 முதல் ஒவ்வொரு பிரிவாக, வெள்ளோட்டம் நடந்து வருகிறது. இன்னும் முழு உற்பத்தித் திறனுடன் இந்த ஆலை இயக்கப்படவில்லை.

(ஆ) போச்சம்பள்ளி "சூரியகாந்தி எண்ணெய் ஆலை" 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் சூரியகாந்தி பயிரிடும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சூரிய காந்தி அதிகமாகப் பயிரிட வேண்டும் என்பதற்காக ராமநாதபுரம் மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வங்கிகள் மூலமாகக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது மூன்று மாதப் பயிர்தான். இதில் 400 ரூபாய் செலவு செய்தால் ஏறத்தாழ 900 ரூபாய் வருவாய் வருகின்ற அளவுக்குத் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த அளவுக்கு விவசாயிகள் பலன் அடைய முடியும்.

(முற்பகல் 9—30)

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, சூரிய காந்தி விதை இப்போது என்ன விலைக்குக் கிடைக்கிறது ? இது குறித்து விவசாயிகளிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கிலோ ஒன்றுக்கு ரூ. 2.25 காசுக்கு வாங்குவதாக ஏற்கனவே வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 400 கிலோ விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, ரூ. 900 கிடைக்கும். ரூ. 400 வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்கப்படுகிறது.

1979 ஏப்ரல் 17]

திரு. சி. ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தி விதைக்காக கட்டப்பட்ட ஆலையில், போதுமான சூரிய காந்தி விதை கிடைக்காததினால், மணிலா பயிர், மற்றும் எள்ளையும் ஆட்டுகிறார்கள். அதைப் போக்குவதற்காக சூரியகாந்திப் பயிரை அதிகப்படுத்துவதற்கு ஊக்குவித்து இப்பேர்ப்பட்ட ஆலையை செயல்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய காந்தி எண்ணெயின் சிறப்பை அறிந்துதான், இன்று தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்தின் மூலம் 'ஸனோலா' என்ற எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு, இன்று வெளியிலே மக்களுக்குக் கிடைக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரையிலே 2,000 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு, இன்று இந்தியாவிலேயே எட்டில் ஒரு பங்கை உற்பத்தி செய்யக் கூடிய அளவுக்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மேலும், இந்த 'ஸனோலா' எண்ணெயை உபயோகிப்பதால் 'கொலஸ்ட்ரால்' வியாதி தவிர்க்கப்படுகின்றது. ஆகவே, இது சிறந்த எண்ணெய் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உபயோகித்து வந்தால், நல்லது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. அப்புனு கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதற்கு கடன் வழங்குவதாகச் சொன்னார்கள். இந்த சூரியகாந்தி விதையை அதிகப்படுத்துவதற்கு அரசுத் துறையிலே சப்சிடி கொடுக்கப்படுகிறதா ? அப்படி இல்லையென்றால், இனிமேலாவது கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அந்த உத்தேசம் இல்லை.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தி எண்ணெய் விதை உற்பத்தி செய்யும் திட்டம் எந்தெந்த மாவட்டத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றதோ, அங்கேயெல்லாம் இந்த சூரிய காந்தியைப் பயிர் செய்யலாம். இதை மாற்றுப் பயிர்த் திட்டத்தின் மூலம் பயிரிட லாம். 'It is a draught resistance varicty' இதற்கு மழை தேவையில்லை. ஒரு மழை பெய்தாலே, அதை வைத்துக் கொண்டு இதைப் பயிரிடலாம். மூன்று மாதங்களில் இதைப் பயிர் செய்ய முடியும். ஆகவே, இதை எல்லா மாவட்டங்களிலுமே கூடப் பயிர் செய்யலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், சூரியகாந்தி எண்ணெய் மிகவும் நல்லது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் ரொம்ப குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றது என்பதும் உண்மைதான். அதிக விலைக்கு விற்கக் கூடிய எண்ணெயோடு இதைக் கலப்படம் செய்து பயன்படுத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, தனியாக இதைக் குறைந்த விலைக்கு விற்கக்கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, கலப்படம் செய்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாக விற்கப்படுகின்ற இந்த எண்ணெயில் எந்த விதமான கலப்படமும் இல்லை. அப்படி கலப்படம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு காத்துக் கொண்டிருக்கிறது. மேலும், இதன் விலை இப்போது கிலோ ரூ. 12.50-க்கு விற்கப்படுகிறது. இதை இன்னும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, சூரிய காந்தி விதை ஒரு கிலோ ரூ. 2—25-க்கு வாங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ரூ. 2-க்கும் குறைவாகத்தான் வாங்குவதாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே புகார் சொல்லப்பட்டது. மேலும், தனியார்கள் ரூ. 3-க்கு வாங்குவதால், தங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்ற புகார் இருந்து வருகிறது. ஆகவே, இந்த விலையைக் கூடுதலாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்ததுபோல கிலோ ரூ. 2—25 இந்தசூரியகாந்தி விதை விலை. ஒரு ஏக்கரிலே 400 கிலோ சூரிய காந்தி விதை பயிராகும் என்று குறிப்பு வேளாண்மைத் துறையிலே இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 400 கிலோ மூலம் ரூ. 900 கிடைக்கும். ஒரு ஏக்கர் இதற்குப் பயிரிட ரூ. 400 செலவாகும். ஆகவே, ரூ. 500 மூன்று மாதங்களில் ஒரு ஏக்கருக்கு கிடைக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் கட்டுப்படியாகவில்லை என்ற நிலை இல்லை. அப்படி இருந்து, கொண்டு வந்தால், கண்டிப்பாக அதைப்பற்றி கவனிப்போம்.

திரு. என். பழனிவேல் : சூரிய காந்திப் பயிர் நமது மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை ஏக்கர் பயிரிடப்படுகிறது? சூரியகாந்தி விதையை அரசே கொள்முதல் செய்து கொடுக்க முன்வருமா? அந்த எண்ணெய் என்னென்ன காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவேயே சொன்ன பதில்களில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு விடை இருக்கிறது. அவர்கள் அதையே திரும்பப் படித்துப் பார்த்தால் கண்டிப்பாக விடை கிடைக்கும்.

பாளையங்கோட்டை மருத்துவ மனைக்கட்டிடம்.

*வினா. எண். 698— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டம் கீரபாளையம் ஒன்றியம் பாளையங்கோட்டையில் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டும் இதுநாள்வரை மருத்துவமனை கட்டப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS